இராணிப்பேட்டை மாவட்டம் செட்டிதாங்கல் அரசு உயர்நிலைப் பள்ளி மாணவி வி.நந்தினி த/பெ வேல்முருகன் 10ஆம் வகுப்பில் 495 மதிப்பெண் பெற்றுள்ளார். மாவட்டத்தில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவிக்கு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி சால்வை அணிவித்து வாழ்த்துத் தெரிவித்தார். இதில் கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணை செயலாளர் ஆர்.விநோத் காந்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல். ஈஸ்வரப்பன், மாவட்ட துணை செயலாளர் துரை மஸ்தான், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.விநோத், ஒன்றிய கவுன்சிலர் செல்விமுருகன், ஊராட்சி மன்ற துணை தலைவர் சரஸ்வதி ஜெயசீலன், நகர தொண்டர் அணி அமைப்பாளர் உமேஷ் மற்றும் பள்ளி ஆசிரியர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு கூட்டம் நாட்றம்பள்ளியில் உள்ள அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக மாவட்டக் கழக செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ சிறப்புரை ஆற்றினார். உடன் மாவட்ட அவைத்தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன், தொகுதி பொறுப்பாளர் வேலூர் ஜி.ரமேஷ்,மாவட்ட பொருளாளர் கே.பி.ஆர்.ஜோதி ராஜன், திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, ஆம்பூர் சட்ட மன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன், திருப்பத்தூர் நகர செயலாளர் எஸ்.ராஜேந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வீ.வடிவேல் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சரின் சிந்தனையில் உதித்த சீர்மிகு திட்டம் – மக்களைத் தேடி மருத்துவம்!

தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்துவதில் இந்திய அளவில் தமிழ்நாடு முன்னோடி!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் – அமெரிக்காவில் நடைபெற்ற மனநல சர்வதேச மாநாட்டில் தலைமை உரை!

லாஸ் ஏஞ்சல்ஸ், மே 23-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் 20.05.2025 அன்று அமெரிக்கா - கலிபோர்னியா மாகாணம், லாஸ் ஏஞ்சல்ஸில் நடைபெற்ற மனநல சர்வதேச மாநாட்டில் 'நாள்தோறும் மேற்கொள்ளப்படும் நடைபயிற்சியால், உடல் மற்றும் மனநலத்தில் ஏற்படும் தாக்கம்' குறித்த தலைப்பில் உரையாற்றினார்.

அவர் ஆற்றிய உரை வருமாறு:-

2004-ஆம் ஆண்டு நிகழ்வுற்ற ஒரு மிகப்பெரிய சாலை விபத்தில் கால்மூட்டு நான்கு ஐந்து துண்டுகளாக உடைந்து தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு அறுவை சிகிச்சையென மூன்று மாதங்களாக படுத்த படுக்கையாக இருக்க வேண்டிய ஒரு எதிர்பாராத சூழ்நிலை எனக்கு நேரிட்டது. நிலைகுலைந்த அத்தகைய ஓர் சூழலில் இனிமேல் தொடர்ந்து தரையில் உட்காரவோ, நடக்கவோ அல்லது ஓடவோ கூடாது என்ற மருத்துவர்களின் அறிவுரை ஒரு பேரிடியாக வந்தாலும் தன்னம்பிக்கையை கைவிடாது ஆறு மாதங்கள் கழிந்த பின்னர் படிப்படியாக யோகா பயிற்சி, மெதுவாக நடத்தல், சிறிய தூரங்கள்



ஓடுதல் என முயற்சி க்கத் தொடங்கி ஓட்டப்பயிற்சி அளவிற்கு உயர்ந்து மாரத்தான் பந்தயத்தில் பங்கேற்கும் அளவிற்கு வளர்ச்சி கண்டேன். அதைத் தொடர்ந்து அடுத்த ஐந்து ஆண்டுகளில் 100 மாரத்தான் பந்தயங்களில் பங்கேற்று உலக சாதனையாளர்கள் பட்டியலில் இடம் பெற்றதோடு விடாமுயற்சி மற்றும் சளைக்காத மனவுறுதியுடன் இது வரை 160 மாரத்தான் போட்டிகளில் பங்கேற்றுள்ளேன். வரும் 24.05.2025 அன்று 161-வது மாரத்தான் போட்டி அமெரிக்கா-கலிபோர்னியா மாகாணத்திலுள்ள சன்னிடேல் என்கின்ற இடத்தில் கலந்து கொள்ள உள்ளேன்.

மாராத்தான் நிதி மக்கள் பணிக்கு

தமிழ்நாடு அரசால் 2020 மற்றும் 2021-ஆம் ஆண்டு நடத்தப்பட்ட 'கலைஞர் நினைவு பன்னாட்டு மெய்நிகர் மாரத்தான்கள்', 2022-ஆம் வருடம் நடைபெற்ற 'கலைஞர் நினைவு பன்னாட்டு மாரத்தான்' மற்றும் 2023-ஆம் ஆண்டு நடைபெற்ற கின்னஸ் உலகசாதனை படைத்த 'கலைஞர் நூற்றாண்டு பன்னாட்டு மாரத்தான்' ஆகியவற்றில் முன்னிலை வகுத்து பங்கேற்றதுடன், இந்நிகழ்வுகள் மூலம் கிடைக்கப்பெற்ற பதிவுத்தொகையான ரூபாய் 5.43 கோடியை கொரோனா நோய்த்தடுப்பு நிவாரண நிதி, எழும்பூர் அரசு குழந்தைகள் மற்றும் தாய்சேய் நல மருத்துவமனையில் குழந்தைகளின் பெற்றோர்கள் தங்குவதற்கான 4 மாடி கொண்ட உறைவிட கட்டடம் மற்றும் இராயப்பேட்டை அரசு பொது மருத்துவமனையில் புற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கான உயர் சிகிச்சைக்கான கட்டடம் போன்ற பல்வேறு உயர் நோக்கங்களுக்காக நன்கொடையாக அளிக்கப்பட்டதை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மக்களைத் தேடி மருத்துவம் - ஐ.நா. விருது!

மேலும், தொற்றா நோய்களை கட்டுப்படுத்துவதில் எவ்வாறு தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக இந்திய அளவில் திகழ்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடந்த 05.08.2021-ல் தொடங்கப்பட்ட 'மக்களைத் தேடி மருத்தும் திட்டம்', ஐக்கிய நாடுகள் அமைப்பின் 2004-ஆம் ஆண்டிற்கான United Nation Interagency Task Force Award பெற்றுள்ளதையும், 'பாதம் பாதுகாப்போம் திட்டம்', 'இதயம் காப்போம் திட்டம்', 'இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும்-48' போன்ற பிற பல்வேறு திட்டங்கள் மூலம் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.

தன்னம்பிக்கை எத்தகைய பலம் வாய்ந்தது என்பதற்கு இலக்கணமாக மயிரிழையில் உயிர்தப்பி இனி முன்பு போல இயங்கவியலாது என்ற நிலையிலிருந்து மனவுறுதி, விடாமுயற்சி மற்றும் தொடர் பயிற்சி காரணமாக மாரத்தான் ஓட்டத்தில் உலக சாதனைகள் புரிந்து இன்று சமுதாயத்தில் உள்ள அனைவருக்கும் குறிப்பாக இளைய சமுதாயத்தினருக்கும், வருங்காலத் தலைமுறையினருக்கும் தினசரி நடைபயிற்சி மற்றும் ஓட்டப்பயிற்சி மூலம் உடல் மற்றும் மனநலம் காக்கப்படுவதை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நல்வாய்ப்பாக இப்பயணம் அமைந்துள்ளது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் உரையாற்றினார்.

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச்செயலாளர்- அமைச்சர்எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி கடலூர் கிழக்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் 26.05.2025 திங்கட்கிழமை அன்று காலை 09.00 மணியளவில் வடலூர் மங்கையர் கரசி திருமண மண்டபத்தில் கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி முன்னாள் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் 2026 சட்டமன்றத் தேர்தல் பணி சம்மந்தமாக ஆலோசனை வழங்கப்பட உள்ளது. எனவே இக்கூட்டத்தில் சட்டமன்ற தொகுதி பார்வயாளர்கள், கடலூர் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள் முன்னாள், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், மாவட்ட, மாநகர கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா. 2026 சட்டமன்றத் தேர்தல் பணிகள் சம்பந்தமாக. கழக ஆக்கப் பணிகள்

அமைச்சர் **எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்.**
கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர்
செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

எஸ்.ஆர். முகிலன்
மே 23 (1999)

1954இல் கழக உறுப்பினராகி பின்னர், கோமல் கிளைக் கழகச் செயலாளர் – மயிலாடுதுறை வட்டக் கழக துணைச் செயலாளர் – வட்டக் கழகப் பொறுப்புச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

மயிலாடுதுறை பகுதியில் கழகம் வளர உழைத்தவர்களில் இவரும் ஒருவர்.

1962இல் விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம் – 1965இல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் – மிசா கைதியாக ஒரு மாத சிறைவாசம்; மேலும் கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழாவை

திருப்பத்தூர் மாவட்டம் முழுவதும் எழுச்சியுடன் கொண்டாடுவோம்!

மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்!

திருப்பத்தூர், மே 23 -

திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு கூட்டம் நாட்றம்பள்ளி எம்.எல்.ஏ. அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன் தலைமையில் நடந்தது.

கூட்டத்தில் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பி, ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன், மாவட்ட கழக துணை செயலாளர் ஆ.சம்பத்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் மாவட்டக் கழக செயலாளர் க.தேவராஜ் எம்.எல்.ஏ. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:

பொதுக்குழுவில் பங்கேற்போம்!

வருகிற 1ந்தேதிமதுரையில்நடைபெறும் கழக பொதுக்குழு கூட்டத்திற்கு நமது மாவட்டத்தில் உள்ள பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு பொதுக் குழுவில் எடுக்கும் முடிவிற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் ஆதரவை தெரிவிக்கும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் ஏழை,எளியோர், பள்ளி மாணவ - மாணவிகள் பயன்படும் வகையில் கொண்டாடுவோம் என்றும் கூட்டத்தின் வாயிலாக கேட்டு கொள்ளப்படுகிறது.

கழக தலைவர் தமிழ் நாட்டின் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை திறப்பு விழா, திருப்பத்தூர் மாவட்டத்தில் முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் சுற்றுப் பயணம் வரும் அன்று திறந்து வைக்கப்படும்.

ஒவ்வொரு பகுதியிலும் உள்ள பி.எல்.சி.யில் 30வயதிற்குட்பட்ட மற்றும் செல்போன் எண்ணை நாளைக்குள் தருமாறு அனைத்துநகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்களை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

48தொகுதிகளுக்கு அமைச்சர் எ.வ. வேலுவை பொறுப்பாளராக அறிவித்தமைக்கு நன்றி!

நமது மாவட்டபொறுப்பு, நெடுஞ்சாலை மற்றும் பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களை 48தொகுதிகளுக்கு மண்டல பொறுப்பாளராக அறிவித்த, கழக தலைவர், தமிழ் நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பாராட்டும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

11ஆண்டுகளுக்கு பிறகு நமது நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை அவர்கள் சிறப்பாக பணியாற்றியமைக்காக "சத்சேனா" விருது பெற்றதற்கு இக்கூட்டம் வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது. இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நிகழ்ச்சியில் மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர் திருப்பத்தூர் தொகுதி பொறுப்பாளர் வேலூர் ஜி.ரமேஷ், ஜோலார்பேட்டை தொகுதி பொறுப்பாளர் தாமரை செல்வன், வாணியம்பாடி தொகுதி பொறுப்பாளர் டாக்டர் ஹபி சுல்லா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வீ.வடிவேல், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தே.பிரபாகரன், மாவட்ட கழக துணை செயலாளர் ஆ.சம்பத்குமார், மாவட்ட பொருளாளர் கே.பி.ஆர்.ஜோதிராஜன், முன்னாள் மாவட்ட பொறுப்பாளர் ம.முத்தமிழ் செல்வி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் கு.ராஜ மாணிக்கம்,

சி.சத்திய மூர்த்தி, எம். அசோகன், ஆர்.டி.சாமுவேல் செல்ல பாண்டியன், பொதுக்குழு உறுப்பினர்கள் டி.ரகுநாத், கே.அரசு, கே.சாமண்ணன், ம.விமலன், பி.கோவிந்தம்மாள், மே.சத்திய நாராயணன், மா.குணசேகரன், நகரசெயலாளர்கள் எஸ்.ராஜேந்திரன், எம்.ஆர்.ஆறுமுகம், ம.அன்பழகன், எஸ்.எம். ஷபீர் அகமத், கயாஸ் அகமத், ஒன்றிய கழக செயலாளர்கள் என்.கே.ஆர்.சூரியகுமார், கே.உமாகன்ரங்கம், கே.சதிஷ்குமார்,

கே.ஆர்.திருப்பதி,எஸ். தாமோதிரன், வி.எஸ்.ஞானவேலன், கே.ஏ. குணசேகரன், கே.முருகேசன், கவிதா தண்டபாணி, டி.சாமுடி, டி.அசோக்குமார், அ.மோகன்ராஜ், ராமமூர்த்தி, த.முரளி, வி.ஜி.அன்பு, ஏ.சி.சுரேஷ்குமார், எம்.ராஜேந்திரன், பேரூர் செயலாளர்கள் ம.ஸ்ரீதர் ஆர்.ஆ.செல்வ ராஜ் எஸ்.உமா சந்திரன், தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் மு.க.அருள்நிதி, விவசாய தொழிலாளர் அணி மு.பழனி, அமைப்பு சாரா ஓட்டுனர் அணி எஸ். ராஜா தொண்டரணி அமைப்பாளர்

சார்லஸ் நவீன் குமார், நெசவாளர் அணி அமைப்பாளர் ஆர்.தசரதன் விளையாட்டு மேம்பாட்டு அணி சே. வெங்கடேசன், கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சி.குணசேகரன் சிறுபான்மை பிரிவு அமைப்பாளர் அபிப்தாங்கல் மருத்துவர் அணி அமைப்பாளர் சங்கர் இலக்கிய அணி அமைப்பாளர் ரகுபதி ,விவசாய அணி அமைப்பாளர் சதாசிவம்,

ஆதி திராவிடர் நலக் குழு எஸ்.மேகநாதன், வணிகர் அணி அமைப்பாளர் பி.என்.எஸ். சரவணன், பொறியாளர் அணி அமைப்பாளர் ஆர்.சந்தீப் ராஜ், அயலக அணி அமைப்பாளர் திருநாவுக்கரசு தொழிலாளர் அணி அமைப்பாளர் தேவராஜ், மகளிர் அணி அமைப்பாளர் ஆர்.சுதா ,மகளிர் தொண்டர் அணி சி. மஞ்சுளா வழக்கறிஞர் அணி அமைப்பாளர் தேவகுமார் மீனவரணி அமைப்பாளர் ஸ்ரீதர், சுற்றுச்சூழல் அணி சிங்காரவேலன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தி.மு.க. இளைஞர் அணி

இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

புதுக்கோட்டை வடக்கு & தெற்கு, நாகப்பட்டினம், மயிலாடுதுறை மற்றும் தஞ்சாவூர் தெற்கு & மத்திய மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

நாள்	நேரம்	கழக மாவட்டம்	இடம்
24.05.2025 சனிக்கிழமை	காலை 10.00 மணி	புதுக்கோட்டை வடக்கு & தெற்கு	கற்பக விநாயகா திருமண மண்டபம், மாலையீடு, புதுக்கோட்டை.
26.05.2025 திங்கள்கிழமை	காலை 10.00 மணி	நாகப்பட்டினம்	தளபதி அறிவாலயம், நாகப்பட்டினம்.
	மாலை 4.00 மணி	மயிலாடுதுறை	விஜய் மஹால், தரங்கம்பாடி சாலை, மயிலாடுதுறை
27.05.2025 செவ்வாய்க்கிழமை	காலை 10.00 மணி	தஞ்சாவூர் தெற்கு	ஏஏஏ பேலஸ், பேருந்து நிலையம் அருகில், பட்டுக்கோட்டை.
28.05.2025 புதன்கிழமை	காலை 10.00 மணி	தஞ்சாவூர் மத்திய	அறிஞர் அண்ணா மஹால், கீழவாசல், தஞ்சாவூர்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 19-05-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி